# கிட்டு பயணம் செய்தபடகு வங்கக்கடலில் வைத்து இந்திய கடற்படையினரால் இடைமறிக்கப்பட்டது

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 03 இதழ் 340
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 16 — 01 — 1993

(பாரிஸ்)

தமிழீழ விடுதலை புலிகளின் சர்வதேச பேச்சாளரான சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) வங்கக்கடலில் படகொன்றில் பயணம் செய்து கொண்டிருந்தபோது இந்திய

(4ம் பக்கம் பார்க்க)

## படகைத் தகர்ப்பதாக கிட்டு எச்சரிக்கை

(பாரிஸ்)

தன்னைக் கைது செய்தால் தன்னையும் படகையும் குண்டு வைத்து தகர்க்கப்போவதாக கிட்டு இந்தியக் கடற்படையினரை எச்சரித்துள்ளரர்.

இலங்கையில் உள்ள விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடத்துடன் மேற்கு நாடுகள் சமர்ப்பித்த சமாதான முயற்சிகளை எடுத்துவரும்போதே,

(4 பக்கம் பார்க்க)

## இந்திய அரசு மௌனம் அறிக்கை இன்று வெளிவரலாம்

(லண்டன்)

கிட்டுவின் படகு இந்திய கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டது குறித்து இந்தி பாதுகாப்பு அமைச்சோ அல்லது கடற்படையோ இது வரை எந்தவிதமான தகவலும் வெளியிடவில்லை. இரு தரப்பினரும் மௌனம் சாதித்தே வருகின்றனர்

எனினும் இந்தியபாதுகாப்பு

(4-ம்பக்கம் பார்க்க)

# இனப்பிரச்னைக்கு தீர்வுகாண ஐரோப்பிய நாடொன்றில் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு?

(லண்டன்)

**இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வு ஒன்றைக் காணும் விதமாக ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஐரோப்பிய நாடொன்றில் வைத்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவருதாக தெரியவருகிறது.**

இதற்கான ஏற்பாடுகளை சில மேற்குலக நாடுகளும் பல சர்வதேசஅமைப்புக்களும் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சர்வதேச மத்தியஸ்தத்தின்கீழ் இந்தப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படும்

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் வெளிநாடு ஒன்றில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுவதற்கான திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது என்று பாரிஸிலுள்ள விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர் திரு லோறன்ஸ் திலகர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகளுடனும், பல்வேறு நாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனும் திரு. கிட்டு நடாத்திய பேச்சுவார்த்தைகளின் மூலமே ஒரு சமாதானத் திட்டம் உருவானது.

இத்திட்டப்படி இலங்கை அரசும்-விடுதலைப் புலிகளும் ஐரோப்பிய நாடு ஒன்றில்

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நிலைப்பாட்டை அரசு ஆராய்கிறது - ரணில் தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தற்போதைய நிலைப்பாட்டை நாம் மிகவும் உன்னிப்பாக ஆராய்ந்து வருகின்றோம் என்று அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

வடக்கையும்- கிழக்கையும் இணைத்த ஒரு நிர்வாகத்தையே விடுதலைப் புலிகள் விருப்புகின்றனர்.

அவர்களின் இந்த விருப்பத்தையும் சமாதான முயற்சி

(4-ம் பக்கம் பார்க்க)

## சர்வ. சமாதான முயற்சியை இந்தியா தடுக்க முயற்சி - நெடுமாறன்

(பாரிஸ்)

கிட்டுவை வழிமறித்ததன் மூலம் இலங்கைப் பிரச்னைக்கு தீர்வு காண நடைபெறும் சர்வதேச அளவிலான முயற்சியை இந்திய அரசு கெடுக்கப் பார்க்கின்றது என்று தமிழ் தேசிய இயக்கத் தலைவர் பா. நெடுமாறன் இந்திய அரசை குற்றம் சாட்டியுள்ளார்

கிட்டு ஆரம்பத்தில் ஐரோப்பிய நாடு ஒன்றில் இருந்து விமானம் மூலம் தெற்காசிய நாட்டுக்கு வந்து அங்கிருந்தே படகு மூலம் இலங்கை நோக்கி பயணத்தை மேற்

(4-ம் பக்கம் பார்க்க)

## மட்டு. மேற்பகுதி காடுகளில் பெரும் ராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பு மேற்குப் பகுதியிலுள்ள காடுகளில் வந்தாறு மூலையிலிருந்து பொலநறுவை வரையில் பெரும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த புதன்கிழமை முதல் பெரும் எண்ணிக்கையிலான பாதுகாப்பு படையினர் இந்த இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினருக்கு உதவியாக விமானப்படை ஹெலிகொப்டர்களும் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (ரி)

## மட்டக்களப்பில் புதிய உதவி பொலிஸ் பிரிவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு என்று காரணம் கூறி புதிதாக ஒரு உதவிப் பொலிஸ் அதிபர் பிரிவை ஏற்படுத்த ஸ்ரீலங்கா அரசு முயற்சிக்கிறது.

ஏற்கனவே களுவாஞ்சிக்குடி. ஏறாவூர், மட்டக்களப்பு, வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் பொலிஸ் பிரிவு ஏற்படுத்தியிருப்பதோடு இந்தப் பொலிஸ் பிரிவுகளிலுள்ள தமிழ் மக்களுக்கு பொலிசாரினால் அடையாள அட்டை விநியோகிக்கப்பட்டுள்ளன என்பதும் தெரிந்ததே. (சு)

## குவைத்தில் அமெரிக்க துருப்புக்கள்

(குவைத்)

வளைகுடாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைகளைத்தொடர்ந்து அமெரிக்கா 1000 துருப்புக்களை குவைத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

4-ம் பக்கம் பார்க்க!

‘ராவய’ கருத்துக்கணிப்பு:

## பிரேமாவிலும் பார்க்க சிறிமாவுக்கு தெற்கில் செல்வாக்கு அதிகம்

(கொழும்பு)

சிங்கள மக்கள் மத்தியில் ஜனாதிபதி பிரேமதாசாவிலும் பார்க்க எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு அதிக செல்வாக்கு உள்ளது.

சிங்கள வாரப் பத்திரிகையான ‘ராவய’ மக்கள் மத்தியில் கருத்துக் கணிப்பெடுத்த போது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

இந்தக் கருத்துக்கணிப்பில் 2542 பேர் கலந்துகொண்ட

(4-ம் பக்கம் பார்க்க)

# இல. தமிழர் பிரச்னை டென்மார்க் விவகாரத்தால் சர்வதேச கவனத்தை பெரிதும் ஈர்த்துவிட்டது

(லண்டன்)

இலங்கைத் தமிழ் அகதிகள் பிரச்னையால் டென்மார்க் பிரதமர் தமது பதவியை துறந்துள்ளதால் இலங்கைத் தமிழர் பிரச்னை சர்வதேச கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளதென செய்திகள் தெரிவிக்கின்றன.

1987ம் ஆண்டு 130 இலங்கைத் தமிழ் அகதிகள் டென்மார்க்கில் குடியேற ஏன்மறுப்புத் தெரிவிக்கப்பட்டது என்று டென்மார்க் பிரதமர் திரு. பவுல்ஸ் ஸ்ளட்ஸடர் அன்று டென்மார்க் நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்து தப்பானது என்பது தற்போது நிரூபிக்கப்பட்டதினாலேயே

(4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்!

### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU KOLA Capsules கிடைக்குமிடம் எஸ். வீ மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சி 7121]


## இந்திய வானொலி புதிய நிருபர்

(புதுடில்லி

அகில இந்திய வானொலி இலங்கைக்கான தனது புதிய நிருபரை நியமனம் செய்துள்ளது. திரு. கே. கண்ணன் என்பவர் கொழும்பு நிருபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிரான குற்றப்பிரேரணை விவகாரத்தில் சபாநாயகர் எம் எச். எம் முகமட் ராஜினாமா செய்வார் என வெளியிட்ட செய்திக்காக அப்போதைய இந்திய நிருபர் கருப்பசாமி நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டதும் தெரிந்ததே. [சி]

## இராசி பலன்

16-01-1993

சனிக்கிழமை

(தமிழுக்கு தை 03)

நவமி ந. இ. 12-22 வரை சுவாதி மு. இ. 10-54 வரை. அமிர்தசித்தம் சுபநாள், இராகுகாலம் காலை 9-34முதல் 11-04 வரை சுபநேரம் மாலை 3-34 முதல் 5 04 வரை.

மேஷம் தொழில் லாபம், பிறர் பாராட்டு, புதிய சிந்தனை.

இடபம்: பயண நன்மை, சத்துரு வெற்றி, குடும்ப சுகம்.

மிதுனம்: குடும்ப பாதிப்பு, தொழில் நஷ்டம், அலைச்சல்.

கடகம்: பலவித துன்பம், கல்வி பாதிப்பு, மன உளைச்சல்.

சிங்கம்: தாய்வழி நன்மை, சமய ஈடுபாடு, பண வரவு.

கன்னி: கடும் வாக்கு, குடும்ப சங்கடம், காரிய தடை.

துலாம்: இனசன வருகை, வருவாய் அதிகரிப்பு, கடமை உணர்வு

விருச்சிகம்: காரிய வெற்றி, அதிக முதலீடு சுபகாரியம்.

தனுசு: பிறர் சகாயம், புரியாத நோய், ஜீவன சுகம்.

மகரம்: புத்திரா பெருமை, வாக்குவசீகரம், அதிகார மேன்மை.

கும்பம்: களவு போதல், சந்தேகம், பயணதடை.

மீனம்: மனைவி துயர், சுப ஜெயம், ஏமாற்றம்.

- ஜோஸ்யர்

## பண். கல்விக் கோட்டம் 4 நடமாடும் செயலகங்களை ஆரம்பிக்க முடிவு

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தில் நான்கு நடமாடும் செயலகங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கோட்டத்திற்கான வேலைகளைத் துரிதப்படுத்தவும் சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் பாடசாலைகள் சம்பந்தமான பிரச்னைகளை ஆராய்ந்து உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுமே இந்தநடமாடும் செயலகங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மல்லாகம் அளவெட்டி. காங்கேசன்துறை கொத்தணிகளுக்கான நடமாடும் செயலகம் மகலாகத்திலும் தெல்லிப்பழை, அம்பனை இளவாலை கொத்தணிகளுக்கான நடமாடும் செயலகம் தெல்லிப்பழையிலும், வட்டுக்கோட்டை, காரைநகர் சுழிபுரம், பண்டத்தரிப்பு கொத்தணிகளுக்கான செயலகம் வட்டுக்கோட்டையிலும் இயங்கவுள்ளன. [139]

## கொழும்பு–புதுடில்லி நேரடி விமான சேவை இன்று ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பு–புதுடில்லி நேரடி விமானச் சேவை, இன்று 16ம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக எயர் லங்கா நிறுவனம் அறிவித்துள்ளது.

இவ்விமானத்தில் இரண்டு போதிமரக் கன்றுகள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும். இலங்கை மக்களின் நல்லெண்ணத்தை, இந்திய மக்களுக்குப் புலப்படுத்தும் முகமாகவே போதிமரக் கன்றுகள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க)

## கடந்த வருடம் நாட்டில் 21 'எயிட்ஸ்' மரணங்கள்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த வருடம் 21 'எயிட்ஸ்' மரணங்கள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எச். ஐ வி வைரஸ் தொற்று உள்ளவர் என கண்டுபிடிக்கப்பட்ட 77 பேரிலேயே 21 பேர் மரணமடைந்துள்ளனர்.

மரணமானவர்களில் பெருமளவினர் வெளிநாட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்நோய் தடுப்புக்காக 1993ல் அரசு 6 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது (சி)

## சுவாமி விவேகானந்தரின் 130வது ஜெயந்தி அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தரின் 130வது ஜெயந்தி. திருநெல்வேலி ராமகிருஷ்ணலய மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். செயலகப் பிரதம கணக்காளர் திரு. சு. சிவபாலன், திரு. கா. மயில்வாகனம் ஆகியோர் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

ராமகிருஷ்ணலய இயக்குநர் திரு. இ. இராஜா மகேந்திரசிங்கம், திருநெல்வேலி கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட 6 வசதி குறைந்த பெண்களுக்குச் சேலைகளை வழங்கினர்.

## சகாயவிலையில் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவு சங்கக் கிளைகளில் கீழ் வரும் பொருட்கள் ஒவ்வொன்றுக்கும் கீழ் குறிக்கப்பட்ட விலைகளில் வழங்கப்படுகின்றது.

வெள்ளைப் பச்சை அரிசி 1 கிலோ 21-50, கோறு அரிசி 1 கிலோ 22-50, சீனி 1 கிலோ 31-00, நீட்டல் பச்சை 1 கிலோ 35-00(வேண்டியளவு), மா 1 கிலோ 13-00ரூபா.


யாழ். பல்கலைக்கழகத்திற்கு உருவப்படமொன்றினை மைதீட்டித் தருவதற்குப் பின்வரும் முற்தேவை விபரங்களுடன் குறிப்பாக ஓவியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முழுப்பெயர்:
தொழில் புரியும் முகவரி:
முன்னைய அனுபவம்:
தங்கள் அனுபவத்தைப் பார்வையிடக்கூடிய வசதி:


மேற்குறிப்பிட்ட முற்தேவைகள் திருப்தி செய்து எம்மால் அங்கீகரிக்கப்படும் விண்ணப்பதாரியிடம் மட்டுமே கேள்விப்பத்திரம் அழைக்கப்படும். மேற்கூறப்பட்ட விபரங்களை 'நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம்' என்ற முகவரிக்கு 93-01 22ம் திகதியன்று காலை 10-00 மணிக்கு அல்லது அதற்கு முன்பதாகவோ தபால்மூலம் அல்லது நேரடியாகச் சமர்ப்பிக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் 'ஓவியம் மைதீட்டல்' எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.
(எ 2796)



ஸ்ரீ சந்தோஷி அன்னை துணை

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### ஆறுமுகம் இருஷ்ணபிள்ளை

(பக்கம்பரை ஆறப்பா)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 1932-08-28 | 1991-01-09 |

நவமித் திதி: 16-01-1993

ஸ்ரீ சந்தோஷிஅன்னை அருளால் ஆத்மா சாந்தியடைவதாக

மகன் A. K. J. அப்பன்
மருமகள J.A. மகேஸ்வரி,
மகள் S. கிருஷ்ணகுமாரி (பவுண்)
மருமகன் - சுந்தர், பேரர்கள்,

குச்சம், அளவாய் வடக்கு.
அளவாய்.
[ஏ- 2795]



இளங்கலைஞர் மன்ற கலாமண்டப

## திறப்பு விழாவும் "ராக பாவம்" நிதியுதவி நிகழ்ச்சியும்

இடம்: மன்ற கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்:
06-02-1993 — 08-02-1993

நுழைவுச் சீட்டு:
நாளொன்றுக்கு 500/- 250/-

பொன். சுந்தரலிங்கம்,
தலைவர்.

அன்பளிப்பு:
ஹரன் வர்த்தக ஸ்தாபனம்,
772, தட்டாதெரு சந்தி,
யாழ்ப்பாணம். (எ-2769)



## புதிய ஆங்கில கல்வி நிலையம்

## NEW ENGLISH ACADAMY

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(82, பருத்தித்துறை வீதி)

### SPECIAL ENGLISH CLASSES

யாழ். நகரின் முன்னணி ஆங்கில ஆசிரியர் குழுவினரின் ஒருங்கிணைந்த சேவை எமது நிறுவனத்தில் மட்டும்.

B. A, G. A. Q
Year 11, 10, 9 (English Lit) ] Dr. A. Sinnathamby (Retd. Education officer English)

SPOKEN ENGLISH WITH GRAMMER
G. C. E. (O/L) 1993 (December)
Year 10, 9,8, 7, 6 ] By R. SIVALINGAM (Dip-in-English)

ஆரம்பம்: 16-01-93 (இன்று) பி. ப. 3-00 மணி.

அனுமதியை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

நிர்வாகி.
(எ 2794)

யாழ்ப்பாணம்

★ தமிழ் மக்களை

# சுபீட்சமாக வாழவைக்கும் முயற்சியாக

# புள்ளி விபரங்கள் திரட்டப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மண்ணில் சுபீட்சமாக மக்களை வாழவைப்பதற்கான முயற்சிப்படிகளில் ஒன்றாகக் குடிசார் மற்றும் பாதிப்புற்றோர் புள்ளி விபரம் திரட்டுதல் நடைபெற்று வருவதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம், புள்ளி விபரம் திரட்டுதல் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழீழத்தின் எதிர்காலம் செழுமையுடன் திகழ்வதற்கு முழுமையான உண்மைப் புள்ளி விபரங்கள் எமக்கு அவசியமாகின்றன. சென்றகாலங்களில் ஸ்ரீலங்கா அரசினால் திரட்டப்பட்ட புள்ளி விபரங்கள் முழுமையானவையாக அமையவில்லை. அத்துடன் இவ்விதமாகச் செய்யப்பட்ட மதிப்பீடுகளும், தொகுக்கப்பட்ட புள்ளி விபரங்களும், தமிழீழ மக்கள் வாழும் பிரதேசங்களில் அரச அதிபர் பிரிவுகளிலும் கிராம சேவையாளர் பிரிவு ரீதியான பகுதிகளை உள்ளடக்கியதாக அமையவில்லை. இவ்வாறு அரசினால் மேலோட்டமான முறையில் திரட்டப்பட்டு வந்த புள்ளி விபரத் திரட்டுதல்கூட 1981ம் ஆண்டின் பின் திரட்டப்படவில்லை.

இன்று தமிழீழத்தில் பலரது சொத்துடைமைகள் இனவாத அரசினால் நாசமாக்கப்பட்டுள்ளன. பலர் அங்கவீனராயுள்ளனர். பலரது உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. இன்னும் பலர் தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து வாழும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமைகளில் இவை பற்றிய விபரங்களை நாம் ஒவ்வொருவரும் மேலோட்டமாக, அரைகுறையாக அறிந்து வைத்திருக்கின்றோமே தவிர முழுமையான தரவுகள் எம்மிடம் இல்லை.

எதிர்காலத்தில் இந்நிலையைப் போக்கி தமிழீழத்தின் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளினதும் குடிசார் மற்றும் பாதிப்புற்றோர் புள்ளி விபரங்களைத் திரட்டுவதில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒத்தாசையுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தின் புள்ளி விபரக் கிளை முனைந்து செயற்பட்டு வருகிறது. இப்பணியில் முதற் கட்டமாக உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விபரங்கள் திரட்டப்பட்டுள்ளன.

திரட்டப்பட்ட புள்ளி விபரங்களினூடாக எமது வளத்தை நாமே அறிந்துகொள்ள முடிகிறது. குறிப்பாக எமது மண்ணின் மனித வளத்தை அறிந்து அதற்கேற்ப எமக்குரிய எதிர்கால வேலைத் திட்டங்களை வகுக்க முடிகிறது. தொழில் ரீதியான புள்ளி விபரங்கள் மூலம் ஏற்ற தொழில் வளங்களைத் திட்டமிட முடிகிறது.

தவிர கல்வி வசதிகள், இருப்பிட வசதிகள், உணவுத் தேவைகள் போன்ற துறைகள் திட்டமிடவும் இப்புள்ளி விபரங்களே பெரிதும் உதவுகின்றன. இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும்மக்கள் தொகையையும், அவர்களது தேவைகளையும் அறிந்து அவர்களுக்கேற்ற உணவு, சுகாதார, கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள இப்புள்ளி விபரங்கள் உதவுகின்றன.

பாதிப்புற்றோர் என்று பரவலாகப் பேசிக்கொள்ளும்போது பாதிப்பின் தன்மை முழுமையாக வெளிக்கொணரப்படமாட்டாது. ஆனால் புள்ளி விபரமதிப்பீட்டின்பின்னர் பாதிப்புற்றோருக்கு உதவுவதற்கான சந்தர்ப்பம் அமையும்போது உரிய முறையில் உதவிகள் சென்றடைவதற்கு இப்புள்ளி விபரங்கள் அத்தியாவசியமாகின்றன.

ஒவ்வொரு குடும்பத்தினரதும் தொழில், வருமானம் போன்றனவும் அறியப்படுவதன் மூலம் வாழ்க்கைத் தராதரங்களில் மிகவும் பின்தங்கியோருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் சில தொழில் வாய்ப்புகளை வழங்க முடிகிறது. நாம் மேற்கொள்ளும் இவ்வித முழுமையான புள்ளி விபரத்திரட்டு மூலம் ஒருவர் முன்னர் செய்த தொழில், இப்போது தொடர்ந்து மேற்கொள்ளமுடியாத தொழில்கள், அதற்கான காரணங்கள் போன்ற பலவும் அறியப்படுவதால் தமிழீழ மக்களின் இன்றைய வாழ்க்கை நிலையை உலகின் பார்வைக்கு முன்வைப்பதற்கு இது உதவுகிறது.

ஆகவே யுத்த சூழ்நிலையின் மத்தியிலும் இவ்வாறான புள்ளி விபரத் திரட்டுகளின் தேவையின் முக்கியத்துவத்தை மையமாக வைத்து ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் விபரங்களைத் திரட்டுவதற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் புள்ளி விபரக் கிளை முனைந்துள்ளது. இந்நடவடிக்கையில் அடுத்ததாக சங்கானை, சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் குடிசார், பாதிப்புற்றோர் புள்ளி விபரங்கள் திரட்டப்படவுள்ளன.

மொத்தத்தில், யுத்தத்தினால் சொத்துடைமைகளையும் உடல் உறுப்புக்களையும் சொந்த பந்தங்களையும் இழந்த நிலையிலும் தொடர்ந்து தாம் வாழமுடியும் என்ற நம்பிக்கையை மனதில் ஏற்படுத்திக்கொண்டு தமிழீழ மண்ணில் சுபீட்சமாக மக்களை வாழவைப்பதற்கான முயற்சியின் படிகளில் ஒன்றே இப்புள்ளி விபரத்திரட்டுதல்கள் எனலாம். (ரி)

## ஜனாதிபதி தேர்தலில் முறைகேடு;

# ஆணையாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

1988ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் பல முறைகேடுகள் நடந்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் திரு சந்திரானந்த டி சில்வா குற்றம்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கைத் தேர்தல் வரலாற்றில் குறைந்தளவு வாக்குகள் கடந்த ஜனாதிபதி தேர்தலில்தான் அளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் நடந்த அன்றைய தினத்தில் 12 பேர் தேர்தலில் கொலையுண்டனர். பலபேர் கொலைப் பயமுறுத்தல்களினால் வாக்குகள் அளிப்பதற்கு முன்வரவில்லை.

1988ம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஜனாதிபதி தேர்தல்காலத்தில் 50 பேர் மட்டும் கொலையுண்டிருக்கலாம். அந்த நேரங்களில் பொலிசாரின் நடவடிக்கைகள் குறைந்துகாணப்பட்டுள்ளது.

10 தேர்தல் மாவட்டங்களில் கூடுதலான வாக்காளர்கள் வாக்களிக்காமல் இருப்பதற்கு பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தது. சில மாவட்டங்களில் உள்ள தேர்தல் சாவடிகளில் உரியநேரத்தில் வாக்களிப்பு நடைபெறவில்லை என்றும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (சு-கீ)

## ராஜீவ் கொலை வழக்கு

# 30 உயர் அதிகாரிகளுக்கு

# ஜெயின் கமிஷன் நோட்டீஸ்

(சென்னை)

ராஜீவ் கொலையை விசாரணை செய்யும் 'ஜெயின் கமிஷன்' மத்திய, மாநில அரசின் உயர் மட்ட அதிகாரிகள் 30 பேருக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

ராஜீவ் படுகொலையின் பின்னணியில் உள்ள சதித் திட்டம் குறித்து விசாரிக்கும் முன்னாள் டில்லி ஹைகோர்ட் நீதிபதி எம்.சி ஜெயின் தலைமையிலான விசாரணைக் கமிஷன் தனது விசாரணையைத் துவக்கியுள்ளது.

இதற்காக மத்திய அரசு மற்றும் தமிழக அரசைச் சேர்ந்த 30 அதிகாரிகளுக்குக் கடந்த வாரம் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## அரசின் கட்டுப்பாட்டில்

# வங்கிகள் இயங்கும்

(கொழும்பு)

பெருந்தோட்டங்களையும் இரு அரச வங்கிகளையும் தொடர்ந்தும் அரசாங்கமே வைத்திருக்குமென பிரதி திறைசேரி செயலாளர் திரு சண்முகலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; இவற்றின் உற்பத்தி, சாத்தியத்தன்மை ஆகியவற்றை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (சி)

# இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ கொன்றையடி வைரவ சுவாமி கோவிலில் இன்று சனிக்கிழமை பகல் ஆயிரத்தெட்டு சங்குகளால் வருடாந்த விஷேச அபிஷேகம் நடைபெறும். மாலை சிறப்பு நிகழ்ச்சியாக வயலின் சோலோ கச்சேரியும், மேளக்கச்சேரியும் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

வேதாந்த சித்தாந்த சமரச ஞானி தாயுமான சுவாமிகள் நினைவுரை மெய்கண்ட தேவர் ஆதீனச்சைவ சித்தாந்த உயர் நிறுவனத்தின் சார்பில் இன்றும், நாளையும் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் நிகழும்.

வழமையான சித்தாந்த விரிவுரைகளோடு இதனை மூதறிஞர் க சி. குலரத்தினம் சித்தாந்தமணி மு. திருஞானசம்பந்தபிள்ளை முதலியோர் நிகழ்த்துவர்.

# 4 தமிழ் இளைஞர் பம்பாயில் கைது

(சென்னை)

வேலூர் தடுப்பு முகாமில் இருந்து கடந்த நவம்பர் மாதம் தப்பிச் சென்ற தமிழ்த் தீவிரவாதிகள் நால்வர், பம்பாய் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

மகேந்திரன், குமார், ரஞ்சித், ராஜா ஆகிய தீவிரவாதிகளே பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

மேற்படி நால்வரும் போலி பாஸ்போர்ட்டுக்களைப்பெற்று வெளிநாட்டுக்குச் செல்லத் திட்டமிட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. (சி)

## இரண்டு பொலிஸாருக்கும்

# உடனடியாக பதவி உயர்வு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளினால் விடுதலை செய்யப்பட்ட சார்ஜன்ட் பண்டார சப் இன்ஸ்பெக்டராகவும் சாரதி கான்ஸ்டபிள் எட்வேர்ட் பெரேரா சார்ஜன்டாகவும் உதவி பொலிஸ் மா அதிபரினால் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு கஷ்டப் பிரதேச கொடுப்பனவு நிலுவையும் வெகுமதி மற்றும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை முதல் இவர்களுக்கு 2 மாத லீவும் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கும் "சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம்" தொடர் பொது விரிவுரையின் 3-வது முழுநாள் அமர்வு இன்று காலை கைலாசபதி கலையரங்கில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

'சைவசித்தாந்த விருத்திக்கு ஈழத்தவரின் பங்களிப்பு" எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. மா. வேதநாதனும் 'சைவசித்தாந்த வாழ்வியல்' எனும் தலைப்பில் கலாநிதி நா ஞானகுமாரனும் உரை நிகழ்த்துவர். (சி)

0 0

(அரியாலை)

கடந்த 11ம் திகதி திங்கள்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான குருநகர் புனித செபஸ்தியார் திருநாள் இன்று செபமாலை பிரார்த்தனை மாலை ஆராதனை திருப்பலியுடன் நடைபெறும். (59)

## தாக்குதலை முறியடித்த வீரர் சுனில் கவஸ்கார்

பம்பாய்

பாம்பாய் நகரில் இனவன்முறையில் ஈடுபட்ட கும்பலொன்றை எதிர்கொண்டு அவர்களின் தாக்குதலை இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் சுனில் கவஸ்கார் முறியடித்துள்ளார். (ரி)

## நாளை

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இந்துசமயப் பேரவையினர் ஆலய தர்மகர்த்தாக்கள், முகாமையாளர்கள் பரிபாலன சபையினருக்கான கருத்தரங்கு ஒன்று நாளை 17-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெறவுள்ளது.

மாவை ஆதீனகர்த்தா சு. து. சண்முகநாதக்குருக்கள் தலைமையில் இடம்பெறும் இக்கருத்தரங்கில் "இந்து ஆலயங்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் என்னும் விடயத்தில் சிறப்புரைகளும் கலாநிதி ப கோபாலகிருஷ்ண ஐயர் எழுதிய "இந்துப் பண்பாட்டு மரபுகள்" என்ற நூல் வெளியீட்டு வைபவமும் இடம்பெறும். வெளியீட்டுரையை பேராசிரியர் அ. சண்முகதாஸ் நிகழ்த்துவார். (சு)

## 100க்கு மேற்பட்ட விமானங்கள்

# ஈராக் ஏவாயுத தளங்கள் மீது

# அசுரவேக தாக்குதல்!

(பக்தாத்)

ஈராக்கின் ஏவாயுத தளங்கள் மீது நூற்றுக்கு மேற்பட்ட நேசதேச விமானங்கள் அசுர வேகத்தாக்குதல்களை நடத்தியுள்ளன.

இத்தாக்குதலின் போது ஈராக்கின் ஏவாயுத தளங்கள் அழிக்கப்பட்டுள்ளதுடன் மீண்டும் தாக்குதல் நடத்தப்போவதாக ஈராக்கிற்கு நேசதேச படைகள் எச்சரிக்கை செய்துள்ளன.

அமெரிக்காவும் அதன் நேசநாட்டுப்படைகளும் ஈராக்கிற்கு எதிராக சக்தி வாய்ந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வெள்ளைமாளிகை அறிக்கைகள் தெரிவித்தன.

இந்தக்குண்டு வீச்சுகளினால் சீற்றமடைந்துள்ள ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் மேற்கு நாட்டு விமானத்தளங்கள் மீது தாக்குதல் நடத்துமாறு ஈராக்கிய விமானப்படைக்கு உத்தரவிட்டுள்ளார். (வி)

# தெரிவுக்குழு வடக்கு கிழக்கை பிரித்து வைத்துவிட்டது

## நவ சமசமாஜக்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)
தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு உருப்படியான தீர்வை நாடாளுமன்ற தெரிவிக்குழு கொண்டு வரும் என்று தமது கட்சி ஒரு போதும் நம்பியிருக்கவில்லை என்று நவசமசமாசக் கட்சி பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு டி மெல் பூங்காவில் அண்மையில் இடம் பெற்ற கூட்டமொன்றிலே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: தெரிவுக் குழுவின் நடவடிக்கைகள் நம்பிக்கையூட்டுவதாக அமையவில்லை. மாறாக வடக்கையும் கிழக்கையும் பிரித்து வைத்ததே அவை செய்தவேலை என்றும் இது முற்றிலும் கண்டிக்கப்பட வேண்டும் என்றார். (சு)

## யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்க்கு 18ம் திகதி சீருடை கிடைக்காது

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் 18ம்திகதி வழங்கப்பட இருந்த இலவச சீருடைகள் அன்றைய தினம் வழங்கப்படமாட்டாது என கல்வி அதிகாரி துரை தியாகராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சீருடைகள் வழங்கும் தினம் பின்னர் அறிவிக்கப்படும். 1993ம் ஆண்டு ஜனவரி மாதம் 5ம் திகதிமுதல் மாணவர்கள் எந்தெந்தப்பாடசாலைகளில் இருக்கின்றார்களோ அந்தந்தப் பாடசாலை அதிபர்கள் சீருடைகளை விநியோகிக்கவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. (சு-157

## ஓய்வூதியர் கவனத்திற்கு

(கொழும்பு
ஓய்வூதியருக்கு இம்மாதம் முதல் மேலதிகமாக வழங்கப்பட்ட 300ரூபாவை இதுவரை பெறாதவர்கள் தத்தமது பகுதிகளில் உள்ள தபால் நிலையங்களில் அதனைப் பெற்றுக் கொள்ளலாமென்று அரசு நேற்று அறிவித்தது.

ஓய்வூதியம் பெறுவோருக்கு இப்பணத்தை உடன் வழங்கும்படி நாட்டிலுள்ளஅனைத்து தபால் நிலையங்களுக்கும் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அரசு மேலும் தெரிவித்தது. (வி)

## வி. பி. சிங் உண்ணாவிரதம்

(புதுடில்லி)
பம்பாய் நகரில் உடனடியாக அமைதியை நிலைநாட்டக்கோரி நேற்றுக்காலை 10 மணி தொடக்கம் ஜனதா தள் தலைவரும் முன்னாள் பிரதமருமான வி. பி. சிங் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளார்

இவருடன் கட்சித் தலைவர்களான திருமதி மிருணாள் கூறேயும், திருமதி நல்லா தாண்டவதேயும் உண்ணாவிரதத்தில் இறங்கியுள்ளனர்.

# சிங்கள அறிஞர் குழுவுக்கு யாழ்.வர அழைப்பு கிடைத்தது

## அங்கிலிக்கன் ஆயர்

(கொழும்பு)
சிங்கள அறிஞர்களி யாழ். நகருக்கு வந்து தமிழ் மக்களின் தற்போதைய நிலையைப் பார்வையிடுமாறு விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் திரு. பிரபாகரன் அழைப்பு விடுத்துள்ளதாக யாழ் நகருக்கு விஜயம்செய்த அங்கிலிக்கன் திருச்சபை கொழும்பு ஆயர் கென்னத் பெர்னாண்டோ நேற்று கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

யாழ் நகரில் லட்சக்கணக்கான மக்கள் வார்த்தையால் கூறமுடியாத அளவு சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள்.

நான் யாழ். நகரில் இருந்த நாட்களில் ஒரு பிஸ்கட் துண்டையேனும் என் கண்ணால் காணவில்லை இவை அனைத்துக்கும் வடபகுதிமக்கள்மீது அரசு விதித்த பொருளாதாரத் தடையே காரணம்.

நம்நாட்டு மக்கள் தமது சொந்த நாட்டிலேயே இவ்வாறான துன்பங்களை அனுபவித்து வருவதைக் காண எம் மனம் மிகவும் துன்பமடைகின்றது என்று கூறிய ஆயர் தான் மீண்டும் விரைவில் யாழ். நகருக்குச் செல்லவிருப்பதாகவும் தெரிவித்தார். (வி)

குவைத்தில்
(1ம் பக்கத் தொடர்ச்சி)
இவர்கள் குவைத் இராணுவத்துக்கு பயிற்சி அளிப்பதோடு ஈராக், குவைத் மேல் தாக்குதல் தொடுத்தால் குவைத்தை பாதுகாப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சு)

## எழுதுவினைஞர் பரீட்சை

(நல்லூர்)
எழுதுவினைஞர்களைத்தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 30ம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் 73 பரீட்சை நிலையங்களில் நடைபெறுமென கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (158)

கிட்டு பயணம்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு இந்தியாவுக்கு அழைத்துச் செல்லப்படுவதாக விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு லோறன்ஸ் திலகர் நேற்று பி. பி. ஸி. க்குதெரிவித்தார்

இது குறித்து திரு. திலகர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவிலிருந்து 440 மைல் அப்பாலுள்ள சர்வதேச கடற்பகுதியில் சம்பவம் நடைபெற்றுள்ளது நிச்சயமாக இது சர்வதேச கடல் பிராந்தியத்தில் தான் நடைபெற்றதென்று உறுதியாக்கப் பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக நாங்கள் சர்வதேசஅளவில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் அத்துடன் மனித உரிமைகள் ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டுள்ளோம். (சு)

படகை
(1ம் பக்கத் தொடர்ச்சி)
அவருக்கு வங்கக்கடலில் துரதிஷ்டவசமான இந்த நிலை ஏற்பட்டுள்ளதென்று கூறப்படுகிறது.

இதேவேளையில் இந்திய கடற்படையினர் இப்போது எதையும் செய்யமுடியாத நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-சு)

இலங்கைத் தமிழர்
(1-ம்பக்கத் தொடர்ச்சி)
டென்மார்க் பிரதமர் தமது பதவியைத் துறந்துள்ளார்.

கடந்த பத்து வருடங்களாக டென்மார்க்கில் பிரதமர் பதவியை வகித்துவந்த ஒருவர் இலங்கை தமிழ் அகதிகளால் தமது பதவியை துறக்க நேரிட்டதால் இலங்கைத் தமிழ் அகதிகள் பிரச்னை மீண்டும் சர்வதேச ரீதியில் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## ஜனாதிபதி தேர்தல் விவகாரம்:

# சிறிமாவின் கோரிக்கை அர்த்தமற்றது - அமைச்சர் ரணில்

(கொழும்பு)
1988-ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் முறைகேடு நிறைந்துள்ளதால் விரைவில் ஜனாதிபதி தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கோருவது ஒரு அர்த்தமற்ற செயலாகும் என்று அமைச்சரவை பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமாக தேர்தல் ஆணையாளர் அண்மையில் வெளியிட்ட அறிக்கை பற்றி எதிர்க்கட்சித் தலைவி தவறான கருத்துக்களை வெளியிட முயற்சிக்கின்றார்.

தேர்தல் நியாயமற்ற முறையிலும், சுதந்திரமற்ற முறையிலும் நடைபெற்றதா என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு நீதிமன்றத்துக்குத் தான் உண்டு. தேர்தல் ஆணையாளருக்கு அல்ல.

ஜனாதிபதி தேர்தல் முறைகேடான முறையில் நடைபெற்றது. ஆதலால் இத்தேர்தலை மீண்டும் நடாத்த வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவி தாக்கல் செய்த வழக்கை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்ததுடன் இத்தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர்களே மிரட்டல்களாலும் பெரிதும் பாதிக்கப்பட்டனர் என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என்று நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது என்றும் திரு. ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார். (வி)

புலிகளின்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
யையும் அரசு நிராகரிக்கவில்லை என்ற கூற்றையே அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவின் பதில் அமைந்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதே நேரம் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதான முயற்சிகள் ஏற்படுவதை கொழும்பிலுள்ள மற்றைய தமிழ்க் குழுக்களின் தலைவர்கள் விரும்பவில்லை என்பதை அவர்கள் வெளியிட்ட அறிக்கைகள் தெரிவிப்பதாக அமைந்துள்ளது என்று அவதானிகள் தெரிவித்துள்ளார்கள். (வி)

## ★ இலங்கைக்கு 10கோடி அமெரிக்கடொலர் உலக வங்கி நிதியுதவி

(கொழும்பு)
இலங்கைக்கு உலகவங்கி மேலும் பத்துக்கோடி அமெரிக்க டொலர் நிதி உதவியை அளிக்கவுள்ளதாக தெற்காசியாவிற்கு பொறுப்பான உலகவங்கி உதவித் தலைவர் யோசேப் வூல்ட் தெரிவித்துள்ளார்.

கொள்ளுப்பிட்டி, கிராமோதய நிலையத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்உதவியைப்பெறுவதற்கு இலங்கைக்கு எவ்வித தடை இல்லையென்றும் வரைவில் இந்நிதியை உலகவங்கி வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார். (வி)

# 1500 அகதி குடும்பங்களுக்கு வீட்டுப்பாவனைப் பொருட்கள்

(கொழும்பு
வவுனியா அகதி முகாம்களில் தங்கியிருக்கும் 1,500 குடும்பங்களுக்கு ஐ நா. அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் 14 லட்சம் ரூபா பெறுமதியான வீட்டுப் பாவனைப் பொருட்களை அண்மையில் வழங்கியுள்ளது.

இதேவேளை கடந்த யூலை மாதம் மன்னார் தீவிலுள்ள அகதிகளுக்கு 10 லட்சம் ரூபா பெறுமதியான மருந்து பொருட்களும் உபகரணங்களும்வழங்கப்பட்டது தெரிந்ததே.

இந்தியாவிலிருந்து நாடு திரும்பியுள்ள வவுனியா, மன்னார், திருமலை மாவட்டங்களில் தங்கியிருக்கும் அகதிகளின் உதவிக்கென 14 லட்சம் ரூபா பெறுமதியான இரு அசோக் லேலண்ட் ட்ரக் வண்டிகளும் ஐ. நா. அகதிகள் நிறுவனத்தால் கையளிக்கப்பட்டுள்ளது. (வி)

ராவய கருத்துக்கணிப்பு
(1ம் பக்கத் தொடர்ச்சி)
னர் என்றும், இவர்களில் விவசாயிகள், எழுதுவினைஞர்கள், டாக்டர்கள், பொறியலாளர்கள் நிர்வாக அதிகாரிகள் இருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

திருமதி பண்டாரநாயக்காவுக்கு 1177 வாக்குகளும் (46 31 வீதம்). ஆர். பிரேமதாசாவுக்கு 445 வாக்குகளும் (17.51 வீதம்) பெற்றிருக்கின்றனர். (சு)

இந்திய அரசு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சு இன்றுஇது தொடர்பாகஓர் அறிக்கையை வெளியிடலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

கிட்டுவின் படகு தற்செயலாக இந்திய கடற்படையினரால்.தடுத்து நிறுத்தப்படவில்லை. அப்படியிருந்திருந்தால் அவரது படகை இது வரை விடுவித்திருக்கலாம்.

கிட்டுவின் கையில் இலங்கை இனப்பிரச்னைக்கு சர்வதேச சமாதானத் திட்டம் ஒன்று இருப்பதன் காரணமாகவே இந்தியா இந்த விடயத்தில் மிகவும் அவதானமாக நடந்து வருவதாகவும், அதன் காரணமாகவே இந்திய அரசு இது தொடர்பாக இதுவரை எந்த வித முடிவும் எடுக்க முடியாத ஒரு சிக்கலான நிலையில் இருப்பதாகவும் பி. பி. ஸியின் சென்னை முகவர் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்னை
(1ம் பக்கத் தொடர்ச்சி)
சர்வதேச மத்தியஸ்தத்தின் கீழ் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இம்முடிவுகள் பற்றி விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமைப் பீடத்துடன் விரிவாக ஆலோசனை நடத்துவதற்காகவேமேற்படி திட்டத்துடன் திரு. கிட்டு சமாதானத் தூதுவராக சென்றபோதே வங்கக் கடலில் வைத்து கடந்த புதன் கிழமை இரவு அவரது படகை இந்திய கடற்படை தடுத்து நிறுத்தியுள்ளது.

இந்த சர்வதேச சமாதான முயற்சியில் இந்தியாவும் பங்குகொள்ள வேண்டும் என்ற நிலைப்பாடும் இருப்பதினால் திரு. கிட்டுவுக்கு எது வித தீங்கும் விளைவிக்காது அவரை இந்தியா விடுவிக்கும் என்றே தான் நம்புவதாக திரு. திலகர் மேலும் கூறியுள்ளார். (வி-இ

சர்வ. சமாதான
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டபோதே சர்வதேச கடல் பிரதேசத்தில் தடுத்து நிறுத்தப்பட்டார் என தெரிவிக்கப்படுகிறது. (சு)

## வட்டு. இந்துவில் கொள்ளை

(வட்டுக்கோட்டை)
வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் பதினையாயிரம் ரூபா (15,000/-) பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விளையாட்டு உபகரணங்கள் வைக்கும் கல்லூரிக் களஞ்சிய அறையிலிருந்தே 11 ஹொக்கி துடுப்புகள், 4 உதைபந்துகள், 3 கைப்பந்துகள் உட்பட மற்றும் பல உபகரணங்கள் களவாடப்பட்டுள்ளன. (139)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் இலவன்கோவில் மேற்கு வீதி,63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Nnmber B/10336/B